**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 155 /2022 PW1**

19.06.2025 **வா.சா.1 ரகுராமன் சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் பியுசி வரை படித்துள்ளேன். எனது பூர்வீகம் திருவண்ணாமலை ஆகும். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள முகவரியில் தான் நான் ஆதியில் இருந்து வசித்து வருகிறேன். நான் பரணி திரையரங்கம் ஒன்றை நடத்தி வந்தேன். தற்போது அதை இடித்து விட்டு வணிக வளாகம் கட்டியுள்ளேன். வணிக வளாகத்தில் இருந்து வரும் வருமாணத்தை நம்பி நான் இருந்து வருகிறேன். எனக்கு வேறு எந்த தொழிலும் இல்லை. 3, 4 பிரதிவாதிகளின் அப்பா சத்திய நாராயணனை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, ஆனால் அதிகமாக பழக்கம் இல்லை. பிரதிவாதிகளை 2019, 2020ல் தான் எனக்கு நன்கு தெரியவந்தது. 2019 - 2020 ஆண்டுகளுக்கு முன்னதாக சத்திய நாராயணன் குடும்பத்திடம் நான் எந்த கொடுக்கல் வாங்கலும் செய்யவில்லை. 2019ல் தான் சத்தியநாராயணன் கூட்டுறவு வங்கியில் மேனேஜர் என்ற முறையில் எனக்கு அறிமுகம் ஆனார். 08.06.2020ல் தான் சத்திய நாராயண மூர்த்தி வா.சா.ஆ.1 அடிப்படையில் முதன் முறையாக கடன் கொடுத்தேன். வா.சா.ஆ.1ஐ சத்திய நாராயண மூர்த்தி தான் கைப்பட எழுதி தந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தவிர்த்து மீதம் உள்ள 3 கடனுறுதி சீட்டுகளை சத்திய நாராயண மூர்த்தி கைப்பட எழுதி கொடுத்தார். அந்த கடனுறுதி சீட்டுக்களை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் பதிவு பெற்ற நிதி நிறுவனம் ஏதும் நடத்தவில்லை. எனக்கு வங்கி கணக்கு புத்தகம் உள்ளது. நான் வருமானவரி தாக்கல் செய்ய தகுதி பெற்ற நபர் என்றால் சரிதான். நான் வருடம் தோறும் வருமான வரி தாக்கல் செய்து வருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 க்கும் வா.சா.ஆ.4க்கும் இடையே சுமார் 90 நாட்கள் இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். முதல் கடன் வாங்கி அதனை திருப்பி செலுத்தாத போது 2வது ஆகவும், 3வது ஆகவும் நான் கடன் உறுதி சீட்டின் பேரில் கடன் கொடுத்தேன் என்று சொல்வது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. அடிக்கடி கல்லூரி கட்டணம் செலுத்துவதற்காக என்னிடம் அவ்வாறு கடன் உறுதி சீட்டின் அடிப்படையில் சத்திய நாராயண மூர்த்தி கடன் வாங்கினார். மகன், மகளுக்கான கல்லூரி கட்டணத்திற்காக அவர் வாங்கிய கடன்களின் கடனுறுதி சீட்டையும் சத்திய நாராயண மூர்த்தி தான் எழுதினார். நான் போய் கடனை கொடுக்கச் சொல்லி கேட்ட போது சத்திய நாராயண மூர்த்தி 3 காசோலையை என்னிடம் கொடுத்தாரா என்றால் இல்லை. கடன்

பெற்ற பிறகு அசலையும், வட்டியையும் கொடுக்காத சத்தி நாராயண மூர்த்திக்கு நான் எனது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. சத்திய நாராயண மூர்த்தி கூட்டுறவு வங்கி மேலாளர் பதவியில் இருந்த போது அவருக்கு ரூ. 45 முதல் 50 ஆயிரம் மாத வருமானம் பெற்று வந்ததாக சொன்னார். சத்திய நாராயண மூர்த்தி என்னிடம் பெற்ற கடன்கள் குறித்து அவரது குடும்ப உறுப்பினர்களிடம் தகவல் சொன்னேனா என்றால் சொன்னேன். முதல் 3 லட்சம் கொடுத்த பிறகு மறுபடியும் ரூ. 3 லட்சம் சத்திய நாராயண மூர்த்தி என்னிடம் கேட்டது சம்மந்தமாக பிரதிவாதிகளிடம் சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை, ஆனால் அவர் அவர்களிடம் சொன்னதாக சொல்லியுள்ளார். (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.